DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.197/2024

Deposition of Witness : LW8/PW8

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.திருஞானம், சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு) | Taluk | |
| Father's Name | கலியமூர்த்தி | Village | |
| Age | 60 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **18.03.2026.** | | | |

(Accused 1 to 3 present)

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது நெய்வேலி, தர்மல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து, கடந்த 31.06.2025 அன்று பணி ஓய்வு பெற்றேன். நான் முத்தாண்டிக்குப்ப காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, கடந்த 08.09.2021 அன்று, சுமார் 16.00 மணியளவில் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது, நெய்வேலி, என்.எல்.சி ஜி.எச்-ல் இருந்து கிடைத்த தகவலை பெற்று, மேற்படி மருத்துவமனைக்கு சென்று விசாரித்தபோது, இவ்வழக்கில் காயம்பட்ட நபரான சுந்தரமூர்த்தி மகன் சாமிதுரை என்பவர் அங்கிருந்து கடலூர் கிருஷ்ணா மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றிருப்பதாக கிடைத்த தகவலை பெற்று, மேற்படி கடலூர் கிருஷ்ணா மருத்துவமனைக்கு சென்று, அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மேற்சொன்ன சாமிதுரை என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலையம் வந்து, புகார் வாக்குமூல அடிப்படையில், நிலைய குற்ற எண்.400/2021 இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)-ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதனுடன் அசல் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து, புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் வெங்கடேசன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** உதவி ஆய்வாளர் என்னை கடந்த 23.11.2021 அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரை பெற்று, நான் சரியாக விசாரணை செய்யாமல், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சத்தியமூர்த்தி, அ.சா-1ஐ எந்த ஆயுதத்தால் அடித்தார் என்று எதுவும் குறிப்பிட்டு, முதல் தகவல் அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் வெற்றிச்செல்வன், தேவகுமார் ஆகியோர் சம்பவத்தை கேள்விப்பட்டுதான், சம்பவ இடம் வந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள்

என்றால், சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக, என்னுடைய மேல்நிலை அதிகாரிக்கு எந்த தேதியில் மேல்விசாரணைக்கு வைத்தேன் என்றால் வழக்கு பதிவு செய்த அன்றே வைத்துவிட்டேன். ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.197/2024

Deposition of Witness : LW9/PW9

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.வெங்கடேசன், உதவி ஆய்வாளர் (ஓய்வு) | Taluk | |
| Father's Name | தங்கவேல் | Village | |
| Age | 60 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **18.03.2026.** | | | |

(Accused 1 to 3 present)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:</u>**

**1.** நான் தற்போது கடலூர் துறைமுகம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து கடந்த 31.05.2025 அன்று பணி ஓய்வு பெற்றேன். இவ்வழக்கில் சிறப்பு உதவி ஆய்வாளர் திருஞானம் புகார் வாக்குமூலம் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கு கோப்பினை என் பார்வைக்கு வைத்ததை நான் பார்வையிட்டு, எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 08.09.2021 அன்று காலை சுமார் 17.00 மணியளவில் சம்பவயிடம் சென்று, சாட்சிகள் சுந்தர், செல்வம் ஆகியோர்கள் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகசர் தயார் செய்து, பார்வை மகசரில் மேற்சொன்ன சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்று, அவர்களை விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ–5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும், இவ்வழக்கின் புகார்தாரரும், காயம்பட்ட நபருமான சாமிதுரை என்பவரையும், சாட்சிகள் கௌரி, வெற்றிச்செல்வன், தேவகுமார் ஆகியோர்களையும் 08.09.2021 அன்று விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. மேற்படி சாட்சிகளின் விசாரணையிலிருந்து வழக்கு சம்பவம் உண்மையென தெரியவந்ததில், வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான சத்தியமூர்த்தி, தட்சிணாமூர்த்தி மற்றும் கஸ்தூரி ஆகியோர்களை தேடியதில் எதிரிகள் அனைவரும் மேன்மைமிகு கடலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் Crl.M.P.No.6262/2021 நாள்.17.09.2021 அன்று முன்ஜாமின் பெற்றிருந்ததால் நான் அவர்களை கைது செய்யவில்லை.

5. வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட சாமிதுரை என்பவருக்கு சிகிச்சை அளித்த நெய்வேலி என்.எல்.சி. பொது மருத்துவமனை மருத்துவர் விக்னேஷ் என்பவரை கடந்த 23.11.2021 அன்று விசாரணை செய்து, மேற்படி நபருக்கு

ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று வழங்கிய காயச்சான்றை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று ஏற்கனவே மேற்சொன்ன மருத்துவர் மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திருஞானத்தை கடந்த 23.11.2021 அன்று, விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி காயம்பட்ட சாமிதுரை என்பவர் கடலூர் கிருஷ்ணா மருத்துவமனையில், சிகிச்சை பெற்றது சம்மந்தப்பட்ட மேற்படி மருத்துவமனை டிஸ்சார்ஜ் அட்வைஸ் ஆவணத்தின் நகல் எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன், அ.சா.ஆ–6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி டிஸ்சார்ஜ் அட்வைஸ் ஆவணத்தின் அசல் மேற்படி காயம்பட்ட நபரிடமிருந்து பெற்று, மேற்சொன்ன மருத்துவரிடம் காயச்சான்று பெறுவதற்காக, வழங்கி, மேற்படி காயச்சான்று பெற்ற பின்னர் மீண்டும் மேற்சொன்ன மருத்துவரிடமிருந்து, மேற்படி டிஸ்சார்ஜ் அட்வைஸ் ஆவணத்தின் அசலை பெற்று காயம்பட்ட நபரிடமே அவரது சிகிச்சைக்கு தேவைப்படும் என்பதால், அவரிடம் ஒப்படைத்துவிட்டேன்.

6. இத்துடன் நான் வழக்கின் புலன் விசாரணையை முடித்து 1வது மற்றும் 2வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன்படியும், 3வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323–ன் படியும், 23.11.2021 அன்று இறுதி அறிக்கை தயார் செய்து, சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கை 08.09.2021 அன்று நான் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். இந்த வழக்கில் அ.சா–1 மற்றும் மற்ற சாட்சிகளையும் எங்கு வைத்து, எப்போது விசாரணை செய்தேன் என்றால், அ.சா–1ஐ 08.09.2021 அன்று இரவு, கடலூர் மருத்துவமனையில் வைத்து, விசாரணை செய்தேன், நேரம் தற்போது ஞாபகமில்லை, இந்த வழக்கில் மற்ற சாட்சிகளை 08.09.2021 அன்று, இரவு சுமார் 8.00–9.00 மணியளவில் சம்பவ நடந்த ஊரில் வைத்து, விசாரணை செய்தேன். இவ்வழக்கில் வழக்கு சொத்தை நான் கைப்பற்றவில்லை. கடலூர் கிருஷ்ணா மருத்துவமனை மருத்துவரை நான் தனியாக விசாரணை செய்யவில்லை. இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. அ.சா–1, சத்தியமூர்த்தி தன்னை எந்த ஆயுதத்தால் தாக்கினார் என்ற விவரத்தினை குறிப்பிட்டுள்ளாரா என்றால், மண்வெட்டியால் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கின் எதிரிகளுக்கும், அ.சா–1ற்கும் இடையே பணம் கொடுக்கல்வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது குறித்து, விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால், தெரிந்துகொண்டேன். அ.சா–1 மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும், சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், சரியல்ல. எனது விசாரணையில், இவ்வழக்கின் எந்த ஒரு சாட்சியாவது

இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக, நிலையம் வந்து தகவல் கொடுத்துவிட்டு, அதன் பின்னர் மருத்துவமனை சென்றதாக கூறியுள்ளார்களா என்றால், கூறவில்லை. சம்பவ இடம் செல்லாமலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும், ஆஜர் எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்து, அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**